**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**10 ஜூலை 2015 / 23 ரமதான் 1436**

# ரமதான் மாதத்தின் மீதமுள்ள சில இரவுகளைப் பிரகாசமாக்குதல்

اَلْحَمْدُ للهِ الَّذي أَنْزَلَ الفُرْقَانَ وَ أَيَّدَ النَّاسَ بالحِكْمَةِ وَ البَيَان،
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ شَهِدَ لِنَفْسِه
الْوَحْدَانِيَّةَ وَ الإِحْسَانِ وَشَهِدَ بِهِمَا مَلاَئِكَتُهُ وَ الثَّقَلاَن، وَأَشْهَدُ
أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَ الرِّضْوَان ،
اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِه وَصَحْبِه وَسَلِّمْ
تَسْلِيْماً كَثِيْرًا.أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِه وَلاَ
تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இன்றைய தினம், இந்த ரமதான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை யாகும். நமது "தக்வா" (இறை பயபக்தி) யின் நிலையென்ன? அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும், அவனால் தடுக்கப்பட்ட விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதிலும் நாம் மேற்கொண்ட முயற்சிகளில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா? என

நாம் சிந்திக்க வேண்டும். ரமதான் மாதத்தின் எத்தனையோ இரவுகள் நம்மிடமிருந்து கடந்து சென்று விட்டன. மிகச் சில இரவுகளே எஞ்சியுள்ளன. நமது ”தக்வா” வை தொடர்ந்து நாம் பலப்படுத்த முயல்வோமாக! அப்போது, இன்ஷாஅல்லாஹ், நாம் அல்லாஹ்வின் மன்னிப்பையும் அவனது திருப்தியையும் அடைவோம்.

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

நாம் தற்போது ரமதான் மாதத்தின் கடைசி பத்து இரவுகளில் இருந்து கொண்டிருக்கின்றோம். இந்த இரவுகளில், அனைத்து இரவுகளை விட மிகச் சிறந்த இரவாகிய ”லைலத்துல் கத்ரு” அல்லது ”கத்ருடைய இரவு” என்றழைக்கப்படும் இரவு உள்ளது என்பதை நாம் அறிவோம். இந்த இரவின் அற்புதங்களைப் பற்றி அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் ”அல்-கத்ர்” எனும் அத்தியாயத்தின் 1-5 வரையிலான வசனங்களில் பின்வருமாறு விவரிக்கின்றான்:

إِنَّآ أَنزَلْنَٰهُ فِى لَيْلَةِ ٱلْقَدْرِ ﴿١﴾ وَمَآ أَدْرَىٰكَ مَا لَيْلَةُ
ٱلْقَدْرِ ﴿٢﴾ لَيْلَةُ ٱلْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ ﴿٣﴾ تَنَزَّلُ
ٱلْمَلَٰٓئِكَةُ وَٱلرُّوحُ فِيهَا بِإِذْنِ رَبِّهِم مِّن كُلِّ أَمْرٍ ﴿٤﴾
سَلَٰمٌ هِىَ حَتَّىٰ مَطْلَعِ ٱلْفَجْرِ ﴿٥﴾

பொருள்: நிச்சயமாக நாம் (குர்ஆனாகிய) இதனை கண்ணியமிக்க இரவில் இறக்கி வைத்தோம். ( நபியே!) கண்ணியமிக்க இரவு என்னவென்று உமக்கு அறிவித்தது எது? (அந்த) கண்ணியமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விட மேலானதாகும். அதில் வானவர்களும், (ஜிப்ரயீலாகிய பரிசுத்த) ஆன்மாவும், தங்களுடைய இறைவனின் கட்டளையைக் கொண்டு, சகல காரியத்தின் பொருட்டும் (பூமியில்) இறங்குகின்றனர். அது சாந்திமிக்க இரவாகும். அதிகாலை உதயமாகும் வரை அது இருக்கும்.

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் மிக மேன்மையானவன்). ஜமாஅத்தார்களே! சற்று சிந்தனை செய்து பாருங்கள்! எவர்கள் வணங்கும் நிலையில் அந்த இரவைச் சந்திக்கின்றார்களோ, அவர்கள் அல்லாஹ்வின் மூலம் எவ்வளவு சிறந்த வெகுமதியை வழங்கப்படுவார்கள் எனக் கற்பனை செய்து பாருங்கள்! அவ்விரவில் புரியப்படும் நற்காரியங்கள், ஆயிரம் மாதங்களில் அதாவது 83 வருடங்களில் புரியப்படும் நற்காரியங்களை விடச் சிறந்தவையாகும் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது நண்பர்களே! நாம் 83 வருடங்கள் வாழ்வோம் என்பதற்கு உத்திரவாதம் இல்லை. மறுபுறம், நமது பாவங்களும் தவறுகளும் தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, அல்லாஹ்வின் மன்னிப்பையும் அவனது ”ரஹ்மத்” எனும் அருள்களையும் அடைவதற்கான எந்த வாய்ப்பையும் தவற விட்டு விட வேண்டாம். மறந்து விட வேண்டாம். நபி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

وَمَنْ قَامَ لَيْلَةَ الْقَدْرِ إِيْمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِه

பொருள்: எவரொருவர், லைத்துல் கத்ரு இரவில் இறை நம்பிக்கையுடனும், நன்மையைக் கருதியும் நின்று வணங்குகிறாரோ, அவர் முன்பு செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

எனினும், "லைலத்துல் கத்ரு" இரவை நாம் தேட முயற்சிக்கும் நிலையில், நாம் அல்லாஹ்வின் திருப்தியைத் தேடுகின்றோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வணக்க வழிபாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் நமக்கு ஏற்பட்டுள்ள ஆர்வமாகிறது, "லைலத்துல் கத்ரு" இரவைச் சந்திக்க வேண்டும் என்பதை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது; இவ்விஷயத்தில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தையும் நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். காரணம், "லைத்துல் கத்ரு" இரவு முதற்கொண்டு அனைத்து விஷயங்களுக்கும் அதிபதியாக இருப்பவன் அல்லாஹ் தான். எனவே, "லைலத்துல் கத்ரு" எனும் இரவுக்கு அதிபதியாக உள்ள அல்லாஹ்வின் திருப்தியைப் பெற நாம் முயற்சிக்கும் போது, அந்த இரவின் மகிமையை விடச் சிறந்த வெகுமதியை அல்லாஹ் நமக்கு வழங்குவான். மேலும், வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதில் நம்மிடம் காணப்படும் இந்த ஆர்வம், ரமதான் மாதத்தின் கடைசி பத்து இரவோடு நின்று விடக் கூடாது; புனிதமிக்க இந்த மாதத்தைத் தவிரவுள்ள மற்ற மாதங்களிலும் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதில் இந்த ஆர்வம் நம்மிடம் தொடர்ந்து காணப்பட வேண்டும்.

ஜமாஅத்தார்களே!

இந்த ரமதான் மாதம், நமது கடைசி ரமதான் மாதமாக இருக்க வாய்ப்புள்ளது. இதன் இரகசியத்தை நாம் அறியமாட்டோம். நாமும் நமது குடும்பத்தார்களும் வரும் ரமதானில் இணைந்து நோன்பு வைப்போமா, தராவீஹ் முதற்கொண்டு இதர தொழுகைகளை சேர்ந்து தொழும் வாய்ப்பைப் பெறுவோமா என்பதும் நமக்குத் தெரியாது. எனவே, ஈதுப் பெருநாளுக்கான தயாரிப்பில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ள நாம், நமது குடும்பத்தார்கள், ரமதான் மாதம் மற்றும் ”லைலத்துல் கத்ரு” இரவின் அற்புதங்களை அடைந்து கொள்வதற்காக கடின முயற்சி செய்ய வேண்டும். இவ்விஷயங்களில் அவர்களை ஆர்வப்படுத்த வேண்டும். ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களின் செயல்பாட்டை ஆர்வத்துடன் பின்பற்றுங்கள்! தன்னோடு வணக்கத்தில் ஈடுபட்டு, ”லைலத்துல் கத்ரு” இரவின் மகிமையைத் தேட வேண்டுமென்பதற்காக, தனது குடும்ப உறுப்பினர்களையும் ரசூலுல்லாஹி(ஸல்) விழிக்கச் செய்தார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வுடனான நமது உறவைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கில், ரமதான் மாதத்தின் மீதமுள்ள இரவுகளில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு, அவற்றைப் பிரகாசமாக்குவோமாக! அல்லாஹ் நம்மை அவன் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டும்; அவனது பார்வையில், நமது மற்றும் நமது குடும்பத்தார்களின்

அந்தஸ்த்துகள் உயர்த்தப்பட வேண்டும் என அல்லாஹ்விடம் உச்சகட்டமான பணிவுடன் துஆச் செய்து கொள்வோமாக! நாம் தொழுகையில் ”ஸஜ்தா” வின் நிலையில் இருக்கும் போது, நமது பாவங்களை நினைத்து வருந்துவோமாக! பின்வரும் துஆவை (பிரார்த்தனையை) அதிகமாக ஓதிக் கொள்வோமாக! :

اللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ كَرِيمٌ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنَّا

பொருள்: யா அல்லாஹ்! நீ அதிகம் மன்னிப்பவன்; சங்கையானவன்; மன்னிப்பதை விரும்புபவன்; எனவே, எங்களை மன்னிப்பாயாக!

நமது பலஹீனத்தை நினைத்து அல்லாஹ்விடம் அழுது புலம்புவோமாக! சக்தியையும் பலத்தையும் வழங்குமாறு அல்லாஹ்விடம் கேட்டுக் கொள்வோமாக! ரமதான் மாதத்தின் இக்காலங்கள், நமது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும் காலங்கள் ஆகும். திருக்குர்ஆனை ஓதி, இந்த இறுதி இரவுகளை அழகாக்குவோமாக! அல்லாஹ்வை ”திக்ரு” செய்வதன் (நினைப்பதன்) மூலம் நமது நாவுகளை ஈரமாக்கிக் கொள்வோமாக! உதவிகள் தேவைப்படுவோர்க்கு, குறிப்பாக, நமது குடும்பத்தார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற உணர்வை அதிகரித்துக் கொள்வோமாக! உதாரணமாக, இன்று நாடு முழுவதிலுமுள்ள பள்ளிகளில் Club HEAL – க்காக நன்கொடைகள் வசூலிக்கப்படுகின்றன. இத்தொகை, மனநோயால் பாதிக்கப்பட்டு, பல சவால்களை எதிர்கொண்டு வரும் நமது சகோதர,

சகோதரிகளுக்கு உதவுவதற்காகப் பயன்படுத்தப்படும். எனவே, மனமுவந்து உதவி செய்வோமாக! அவ்வாறு செய்தால், ரமதான் மாதம் முழுவதும் நாம் புரியும் நற்காரியங்களை ஏற்று, நமக்கு பரக்கத்களை அல்லாஹ் வழங்குவான்.

பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மஃசூமாக (குற்றமற்றவர்களாக) இருந்த போதிலும், ரமதான் மாதத்தின் பிந்திய இரவுகளில் அல்லாஹ்வுக்கான தனது வணக்க வழிபாட்டுச் செயல்களை அதிகரித்துக் கொண்டார்கள்; அவ்வாறிருக்க, நாம் எந்தளவு வணக்க வழிபாடுகளைப் புரிய வேண்டும் என்பதை, இப்பிரசங்கம் முடிவடையும் இவ்வேளையில், நினைவில் கொள்வோமாக! ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் இம்முன்மாதிரியை ஆர்வத்துடன் பின்பற்றுவோமாக! இந்த கடைசி பத்து இரவுகளில், பள்ளிகளில் ”இஃதிகாஃப்” இருக்க நமக்கு நேரம் கிடைத்தால் அதையும் செய்வோமாக! வேலைகளில் அலுவல்மிக்கவர்களாக உள்ளவர்களும் அல்லாஹ்வின் வீட்டில் ”இஃதிகாஃப்” இருப்பதற்குப் பொருத்தமான நேரங்களைத் தேடிக் கொள்ள வேண்டும். காரணம், இவ்விஷயத்தில் வேலைப் பளுவை ஒரு காரணமாக நாம் காட்ட இயலாது. ”இஃதிகாஃப்” இருக்கும் எண்ணத்துடன் லுஹர் தொழுகைகளை பள்ளிகளில் தொழலாம். அல்லது பள்ளிகளில் குடும்பத்தாருடன் ”கியாமுல் லைல்” தொழுகைகளைத் தொழுது ரமதான் மாதத்தின் மீதமுள்ள இரவுகளை நாம் பிரகாசமாக்கலாம்.

யா அல்லாஹ்! லைலத்துல் கத்ரு இரவின் அதிபதியே! எங்களுக்கும் எங்கள் குடும்பத்தார்களுக்கும் இந்த இரவின் வெகுமதிகளை

வழங்குவாயாக! உனது பார்வையில் எங்களின் அந்தஸ்த்துகளை உயர்த்துவாயாக!

யா ரஹீம்! யா லதீஃப் இது எங்களுக்கு கடைசி ரமதானாக இருக்குமெனில், இம்மாதம் முடிவதற்குள் எங்களின் அனைத்து பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டும் எங்களைப் பரிசுத்தமாக்கி விடுவாயாக! இந்த ரமதான் எங்களின் குடும்பத்தாருடன் நாங்கள் இருக்கும் இறுதி ரமதான் என நீ எங்கள் விஷயத்தில் எழுதியிருந்தால், மறுமையில், உனது சொர்க்கத்தில் எங்களை ஒன்று சேர்த்து வைப்பாயாக! யா ஹலீம்! யா அளீம்! உன்னைச் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும், இப்புனிதமிக்க மாதத்தின் நற்காரியங்களுடன் உன்னைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலையும் எங்கள் நெஞ்சங்களில் நீ பசுமையாக ஆக்குவாயாக! ரமதானுக்குப் பின்பு நற்காரியங்களைத் தொடர்ந்து செய்பவர்களில் நின்றும் எங்களை ஆக்குவாயாக! ரமதான் மாதத்தை நற்காரியங்களாலும், வணக்க வழிபாட்டுச் செயல்களாலும் நாங்கள் நிரப்பியது போல், எங்கள் உள்ளங்களில் ”ஈமான்” எனும் உன் மீதான நம்பிக்கையால் நிரப்புவாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيهِ مِنَ
الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاوَتَهُ إِنَّهُ هُوَ
السَّمِيعُ الْعَلِيمُ ، أَقُولُ قَوْلِي هذَا وَأَسْتَغْفِرُ اللَّهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ،
وَلِسَائِرِ الْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ ، وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ ،
فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِينَ وَيَا نَجَاةَ التَّائِبِينَ.